கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

முதலாம் வருட/இரண்டாம் அரையாண்டு கலைமாணித் தேர்வு – 2014/2015
(மார்ச்/ஏப்ரல் 2017)

# DT 1212 Introduction to Traditional Theatre Arts

நேரம் : 02 மணித்தியாலங்கள்

பகுதி – I இல் உள்ள எல்லா வினாக்களுக்கும் பகுதி – II இல் இருந்து இரு வினாக்களுக்குமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி – I

01.
i. கூத்தரங்கு என்றால் என்ன?
ii. யாழ்ப்பாணத்தில் ஆடப்படும் பாரம்பரிய அரங்க வடிவங்கள் நான்கினைத் தருக.
iii. காமன் கூத்தில்வரும் கதாபாத்திரங்கள் நான்கினைத் தருக.
iv. சிங்கள சடங்குசார் ஆற்றுகைகள் செய்யப்படுவதற்கான காரணங்கள் நான்கு தருக.
v. மகிடிக் கூத்து என்றால் என்ன? மகிடிக் கூத்தில் வரும் பாத்திரங்கள் இரண்டு தருக.
vi. மன்னாரிலும் மட்டக்களப்பிலும் பயில்நிலையில் உள்ள பாரம்பரிய அரங்க வடிவங்களில் காணப்படும் வித்தியாசங்கள் இரண்டினைத் தருக.
vii. 1960 களில் கூத்துச் செம்மையாக்கம் எனும் செயற்பாட்டின்போது வெளிவந்த ஆற்றுகைகள் நான்கினைத் தருக.
viii. உலகமயமாக்கல் சூழலில் பாரம்பரிய அரங்கின் தேவை என நீர் கருதுவதில் மூன்றைத் தருக?
ix. பாரம்பரிய அரங்கின் பண்புகள் இரண்டு தருக.
x. கேரளத்திலும் தமிழ் நாட்டிலும் நிகழ்த்தப்படும் பாரம்பரிய அரங்கின் பண்புகள் இரண்டைத் தருக.

(2x10=20 புள்ளிகள்)

02. சுருக்கமாக விடை தருக.

i. கூத்து செம்மையாக்கம், கூத்து மீளுருவாக்கம் ஆகிய இருபதங்களையும் தெளிவுபடுத்துக.
ii. சடங்கிற்கும் பாரம்பரிய ஆற்றுகைக்கும் இடையிலான தொடர்புகள் யாவை என்பது பற்றித் தெளிவுபடுத்துக.
iii. காலனிய சிந்தனை பாரம்பரிய அரங்கைப் பார்த்த விதம்பற்றி தருக.
iv. பாரம்பரிய கூத்தரங்கில் பயன்படுத்தப்படும் சொற்கள் பற்றிக் குறிப்பிடுக.

(4x5=20 புள்ளிகள்)

## பகுதி – II

03. வடமோடிக் கூத்தின் ஆற்றுகை முறையினை நீர் அண்மையில் அக் கூத்திற்கான களரியடித்தலின்போது பார்த்த வீரகுமாரன் நாடகம் வடமோடிக் கூத்தினை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

(30 புள்ளிகள்)

04. சிங்களப் பாரம்பரிய அரங்கில் கோல அரங்கு பெறும் இடம் பற்றித் தெளிவுபடுத்துக.

(30 புள்ளிகள்)

05. பாரம்பரியக் கூத்தரங்கின் தொடர் செயற்பாட்டிற்கும் சமூக ஊடாட்டத்திற்குமான தொடர்பினை மதிப்பிடுக.

(30 புள்ளிகள்)

06. மட்டக்களப்பு பூர்வீகக் குடிகளிடம் பயில்வில் உள்ள புலிக்கூத்து ஆற்றுகை பற்றி விளக்குக.

(30 புள்ளிகள்)

*****